www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

VNR8S

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

# வகுப்பு 8

## அறிவியல்

காலம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:** **12×1=12**

1) பின்வரும் திரவங்களில் எது அதிக பாகுநிலை உடையது?
அ) கிரீஸ் ஆ) நீர் இ) தேங்காய் எண்ணெய் ஈ) நெய்

2) வாகனங்களில் பின் காட்சி ஆடியாகப் பயன்படுத்தப்படும் ஆடி ..............
அ) குழி ஆடி ஆ) குவி ஆடி
இ) சமதள ஆடி ஈ) இவற்றில் எதுவுமில்லை

3) திரவ நிலையிலிருந்து திடநிலைக்கு மாறும் நிகழ்விற்கு .............. என்று பெயர்.
அ) பதங்கமாதல் ஆ) குளிர்வித்தல் இ) உறைதல் ஈ) படிதல்

4) பின்வருவனவற்றில் எது இரைச்சலால் ஏற்படலாம்?
அ) எரிச்சல் ஆ) மனஅழுத்தம் இ) பதட்டம் ஈ) மேற்கூறிய அனைத்தும்

5) பாதரசத்தின் குறியீடு ..............
அ) Ag ஆ) Hg இ) Au ஈ) Pb

6) காற்றேற்றம் செய்யப்பட்ட நீரில் .............. உள்ளது.
அ) காற்று ஆ) ஆக்சிஜன் இ) கார்பன் டை ஆக்சைடு ஈ) நைட்ரஜன்

7) கேதோடு கதிர்கள் .............. ஆல் ஆனவை.
அ) மின்சுமையற்ற துகள்கள் ஆ) நேர்மின்சுமை பெற்ற துகள்கள்
இ) எதிர் மின்சுமை பெற்ற துகள்கள் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

8) நீரின் நிரந்தர கடினத்தன்மைக்கு .............. இருப்பதால் ஏற்படுகிறது.
அ) சல்பேட்டுகள் ஆ) தூசுகள்
இ) கார்பனேட் மற்றும் பைகார்பனேட் ஈ) கரைந்துள்ள பிற துகள்கள்

9) உயிருள்ள மற்றும் உயிரற்ற பண்புகளைப் பெற்றவை ..............
அ) புரோட்டோசோவா ஆ) வைரஸ் இ) பாக்டீரியா ஈ) பூஞ்சை

10) பின்வருவனவற்றில் ஒன்று உண்ணக்கூடிய காளான்
அ) பாலிபோரஸ் ஆ) அகாரிகஸ் இ) பெனிசிலியம் ஈ) ஆஸ்பெர்ஜில்லஸ்

11) கரப்பான்பூச்சி எதன் உதவியுடன் நகர்கிறது?
அ) கால் ஆ) எலும்பு இ) தசைக்கால் ஈ) முழுஉடல்

12) நாளமில்லா சுரப்பிகளால் உற்பத்தி செய்யப்படும் வேதிப்பொருள்கள் .............. எனப்படும்.
அ) ஹார்மோன்கள் ஆ) நொதிகள் இ) புரதங்கள் ஈ) கொழுப்பு அமிலங்கள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** **5×1=5**

13) திண்மக்கோணம் .............. என்ற அலகில் அளக்கப்படுகிறது.

14) மின்னல் தாக்குதலில் இருந்து கட்டடங்களைப் பாதுகாக்கும் சாதனம் ..............

15) .............. தொழிற்சாலைகளில் யூரியா தயாரிப்பதில் அடிப்படைப் பொருளாக உள்ளது.

16) குளவியின் கொடுக்கில் .............. அமிலம் உள்ளது.

17) மிகப்பெரிய செல் .............. இன் முட்டை ஆகும்.

**III. சரியா அல்லது தவறா என எழுதுக. தவறான வாக்கியத்தை திருத்தி எழுதுக:** **5×1=5**

18) ஒரு பொருளின் எடை மிதப்பு விசையைவிட அதிகமாக இருந்தால் அப்பொருள் மூழ்கும்.

19) பக்க இணைப்பில் அனைத்துக் கூறுகளிலும் மின்னோட்டம் மாறிலியாக இருக்கும்.

20) ஒரு வேதிவினை என்பது தற்காலிக வினையாகும்.

21) ஈஸ்ட் அதிக அளவில் ஆல்கஹாலை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது.

22) இதயத்தசை ஒரு இயக்கு தசை.

**IV. பொருத்துக:** **5×1=5**

| | | |
|---|---|---|
| 23) சர்வ கரைப்பான் | - | நீர் மாசுபடுத்தி |
| 24) கடின நீர் | - | கிருமிகளைக் கொல்லுதல் |
| 25) கொதித்தல் | - | ஓசோனேற்றம் |
| 26) நுண்ணுயிர் நீக்கம் | - | நீர் |
| 27) கழிவுநீர் | - | வயிற்று உபாதைகள் |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**V. ஏதேனும் பத்து வினாவிற்கு விடையளி:** **10×2=20**

28) ஆம்பியர் - வரையறு.

29) திரவ அழுத்தத்தை அளவிட உதவும் இரு கருவிகளின் பெயர்களைக் கூறுக.

30) ஒளிவிலகலுக்கான ஸ்நெல் விதியினைக் கூறுக.

31) அன்றாட வாழ்வில் வெப்பக்கடத்தல் நிகழ்விற்கு இரண்டு உதாரணம் தருக.

32) ஒரு ஒலி அலை 8 வினாடிகளில் 2000மீ பயணிக்கிறது எனில் ஒலியின் வேகம் என்ன?

33) திரவ நிலையில் உள்ள ஏதேனும் மூன்று சேர்மங்களைக் குறிப்பிடுக.

34) மாசுபடுதல் என்றால் என்ன?

35) மீனை நீரிலிருந்து வெளியே எடுத்தவுடன் இறந்துவிடுகிறது. ஏன்?

36) ஆனோடு கதிர்களின் பண்புகளை எழுதுக.

37) நடுநிலையாக்கல் வினை என்றால் என்ன?

38) எதிர்உயிர்க்கொல்லி என்றால் என்ன?

39) பூஞ்சைகளின் ஏதேனும் இரு பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.

40) காற்று நுண்ணறைகளின் பணிகளைக் கூறுக.

41) கிரானியம் என்றால் என்ன?

42) பருவமடைதலின்போது ஏற்படும் மாற்றங்களைப் பட்டியலிடுக.

**VI. ஏதேனும் எட்டு வினாவிற்கு விடையளி:** **8×4=32**

43) உராய்வைக் குறைக்க ஏதேனும் மூன்று வழிமுறைகளைக் கூறுக.

44) குழி ஆடி மற்றும் குவி ஆடிகளின் பயன்களுள் இரண்டினைத் தருக.

45) வெப்பக்குடுவை வேலை செய்யும் விதத்தினை விளக்குக.

46) ஒலி மாசுபாட்டின் விளைவுகளைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?

47) பின்வருவனவற்றிற்கான காரணங்களை எழுதுக.

அ) சோடியம், பொட்டாசியம் ஆகிய இரண்டு மண்ணெண்ணெயின் உள்ளே வைக்கப்படுகின்றது.

ஆ) வெப்பநிலைமானிகளில் பாதரசம் பயன்படுத்தப்படுகிறது.

48) கீழ்க்காணும் சமன்பாடுகளைச் சமன்செய்க.

அ) $Na+O_2 \rightarrow Na_2O$

ஆ) $Ca+N_2 \rightarrow Ca_3N_2$

இ) $N_2+H_2 \rightarrow NH_3$

ஈ) $CaCO_3+HCl \rightarrow CaCl_2+CO_2+H_2O$

49) நீரின் கடினத்தன்மையை நீக்கும் முறைகள் யாவை?

50) அமிலங்களின் பயன்கள் யாவை?

51) மருத்துவத் துறையில் நுண்ணுயிரிகள் எவ்வாறு பயன்படுகின்றன?

52) ஜிம்னோஸ்பெர்ம் மற்றும் ஆஞ்சியோஸ்பெர்ம் தாவரங்களுக்கு இடையே உள்ள ஐந்து வேறுபாடுகளை எழுதுக.

53) மனிதக் கண்ணின் உள்ளமைப்பின் படம் வரைந்து பாகங்களைக் குறி.

54) வளரிளம் பருவத்தினருக்கான ஊட்டச்சத்துத் தேவைகள் பற்றி சுருக்கமாக விளக்குக.

**VII. விரிவாக விடையளி:** **3×7=21**

55) அ) கடிகாரங்களின் வகைகளைப் பற்றி சிறுகுறிப்பு வரைக. **(அல்லது)**

ஆ) மின்துகள்களை இடமாற்றம் செய்யும் மூன்று முறைகளை விளக்குக.

56) அ) வேதிவினை மூலம் சுற்றுச்சூழல் மீது ஏற்படும் விளைவுகளை விளக்குக. **(அல்லது)**

ஆ) அமில மழையின் விளைவுகள் யாவை? அதை எவ்வாறு தடுக்கலாம்?

57) அ) விவசாயத்தில் நுண்ணுயிரிகள் அத்தியாவசியமானவை. ஏன்?
ஏதாவது மூன்று புரோட்டோசோவாக்களின் பெயர்களை எழுதுக. **(அல்லது)**

ஆ) i) காற்றுள்ள மற்றும் காற்றில்லா சுவாசத்திற்கு இடையே உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

ii) வெவ்வேறு வகையான திசுக்களை வகைப்படுத்துக.

-------------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com